முருகப்பெருமான் துணை

**மகான் திருமூலதேவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.05.2022, திங்கட்கிழமை

1. தருமத்தின் தலைவனே அரங்கா
தவசியாக வாழும் ஞான தேசிகா
பெருமைபட அருளாசி தன்னை
புகலுவேன் சுபகிருது தகர் திங்கள்

2. திங்களிலே மூவாறோர்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 19ம் நாள், 02.05.2022 திங்கட்கிழமை)
தேசிகனுக்கு திருமூலதேவர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்

3. அருளும் அரங்கமகா ஞானியே
ஆறுமுகனார் சக்தி வடிவாக நின்று
அருளும் பொருளும் அழியா வரமும்
அகிலத்தில் தந்து வருகவே

4. வருமுலகில் உலக மக்கள்
வணங்கித் தொடர்ந்து வர
ஆறுமுகா என தீட்சை ஆசிபெற
அன்னதான மகா சேவையை போற்றி

5. போற்றியே தன்வரவில் ஒருபங்கை
புண்ணியமாகத் தந்து வர
ஆற்றல்பட அந்தவித ஒருபங்கு
ஆயிரம் பங்காக மடங்காக மாறி

6. மாறியே தேட்டு தனவளமும்
மனபலமும் கண்டு தேறுவர்
கூறியே அரங்கஞானிப்புகழை
குவலயம் எங்கும் கொண்டுச்செல்ல

7. செல்லவே இந்தப் பேருலகம்
செல்வ வளம் குன்றாதபடி
நல்விதமாய் இயற்கை வளம்கூடி
ஞானபண்டிதன் அருள்பெற்ற பூமியாக

8. ஆகவே கலியுகம் மாற்றம்
ஆபத்தில்லா ஞானயுகமாக
மிகைபட ஞானவான்கள் நிறைந்த
மாதருமம் மிகுந்த தருமபூமியாக

9. ஆகவே எங்கும் நல்சக்தி
அரங்கன் ஆசியாகக் கலந்து
யுகமாற்றம் நடந்தேறக் கூடும்
உயிர்கொலை நீக்கி உண்மை நெறியை

10. நெறியை உலகம் ஏற்று
நீதிமான்கள் தலைமைகொண்ட
அறிவு முதிர்ச்சி தெளிவு கொண்ட
ஆன்மீக ஞான ஆட்சியாக

11. ஆகவே உலகம் அடைந்துமே
ஆற்றலும் அமைதியும் மகிழ்வும்
மிகையான பாதுகாப்புமிக்கநல்
மேலவர்கள் ஆட்சியாக மாறும்
அருளாசி முற்றே

–சுபம்–